# தொல்லியல் துறை

- **தொல்லியலின் கோட்பாடு என்பது மனிதனின் கடந்த காலத்தை அறிவியல் துணைகொண்டு அறிந்து கொள்ள முயற்சிக்கும் ஆய்வாகும்.** இது உலகத்தைப் பற்றிப் பொருளுள்ள வகையிலும் வளமான வகையிலும் ஆழமான புரிதலை நமக்கு வழங்குகிறது.

- **மனிதனின் கடந்த காலத்தைப் பற்றிய ஆய்வு என்பது மனிதனின் செயல்பாடுகள் மற்றும் அறிவாற்றலினை அக்கால சமூக-அரசியல்-பண்பாட்டுச் சூழல்களுக்குள் பொருத்திப் பார்த்து அவை காலந்தோறும் பெற்ற மாற்றத்தை ஆராய்வதாகும்.**

- **தொல்லியல் (Archaeology)** என்ற சொல் **ஆர்க்கியோஸ் (Archaeos)** என்னும் பழமையான கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது.

- **ஆர்க்கியோஸ் (Archaeos)** என்றால் **'தொன்மை' மற்றும் 'லோகோஸ்' (logos)** என்றால் ஆய்வு, விவாதம், காரணம் அல்லது அறிவியல் என்று பொருள்படும்.

## I. துறையின் நோக்கங்கள்

- **தொல்லியல் துறை 1961 ஆம் ஆண்டு பின்வரும் குறிக்கோள்களுடன் தொடங்கப்பட்டது.**
    - புராதன மற்றும் வரலாற்றுச் சின்னங்களை அடையாளங்கண்டு, பேணிப் பாதுகாத்தல்.
    - மாநிலம் முழுவதும் வரலாற்று மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளை மேற்கொள்ளுதல்.
    - கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ளவைகளைப் படியெடுத்து, படித்து பதிப்பித்து ஆவணப்படுத்துதல்.
    - அகழ்வைப்பகங்கள் அமைத்தல்.

## II. வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டுபிடிப்புகள்

- **கீழடி அகழாய்வில் தமிழி எழுத்துப் (தமிழ்-பிராமி) பொறிக்கப்பட்ட பானை ஓடுகளுடன்** இணைந்து சேகரிக்கப்பட்ட கரிம மாதிரிகளை அறிவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியதில் **கி.மு.6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை** (AMS C14 காலம் கி.மு.580 மற்றும் AMS C14 கால அளவீடு செய்யப்பட்ட காலம் கி.மு.679) என்று கண்டறியப்பட்டது.

- இந்த **கண்டுபிடிப்பு தமிழி (தமிழ்-பிராமி) எழுத்து முறை கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது** என்று ஏற்கனவே நிறுவப்பட்டதை மேலும் ஒரு நூற்றாண்டு முன்னெடுத்துச் சென்று **கி.மு. 6-ஆம் நூற்றாண்டு** என்று நிறுவியது.

- மேலும், இந்த **கண்டுபிடிப்பு அன்றைய காலக்கட்டத்தில் தமிழர்கள் கொண்டிருந்த மேம்பட்ட கல்வியறிவினை** எடுத்துக்காட்டுகிறது.

- **இரண்டாவது நகரமயமாக்கல்** வளர்ச்சிக்கு இணையாக தமிழ்நாட்டிலும் நகரமயமாக்கல் இருந்துள்ளது.

- **ஆதிச்சநல்லூருக்கு அருகிலுள்ள சிவகளையில்** மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் ஈமத்தாழி ஒன்றில் சேகரிக்கப்பட்ட நெல் மாதிரியினை அமெரிக்காவில், புளோரிடாவின் மியாமியில்

உள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்டதில் அதன் **காலம் கி.மு. 1155-க்கு முந்தையவை** என உறுதி செய்யப்பட்டுள்ளது.

- இக்காலக்கணக்கீடு **பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரை நாகரிகம் 3200 ஆண்டுகள்** பழமையானது என்பதை அறிவியல் அடிப்படையில் உறுதிப்படுத்துகிறது.

- **கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில்** மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கி.மு. **1615 மற்றும் கி.மு. 2172 ஆகிய இரண்டு முக்கியமான காலக்கணக்கீடுகள் (AMS)** கிடைத்துள்ளன.

- இக்காலக் கணக்கீடுகள் **இரும்பின் அறிமுகம் மற்றும் புதிய கற்காலத்தின் பிந்தைய காலக் கட்டத்திலிருந்து இரும்புக் காலத்திற்கு மாறுகின்ற காலம்** பற்றிய மதிப்புமிக்க புரிதலை வழங்குகின்றன.

- மயிலாடும்பாறையின் இந்த காலக் கணக்கீடுகள் **கி.மு. 3000 ஆண்டின்** தொடக்கத்தில் தமிழ்நாட்டில் **இரும்புக் காலம் நிலவியதையும் அதற்கு முந்தைய காலம் புதிய கற்காலம்** என்பதையும் உறுதிப்படுத்துகின்றன

### III. பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைப் புனரமைத்தல்

- குறிப்பாக, தமிழ்நாடு, தனது வரலாறு மற்றும் பண்பாட்டுச் செழுமையை முழுவதும் நிரல்பட வெளிப்படுத்துகின்றது. தமிழ்நாட்டின் உன்னத கலைகளையும் கட்டடக்கலை மரபினையும் வியந்து பார்க்க பார்வையாளர்கள் அடிக்கடி வருகை புரிகின்றனர்.

- தமிழ்நாட்டு வரலாற்றுச் சின்னங்களில் காணப்படும் கலை வடிவங்கள் பண்டைய சிற்பிகளின் நேர்த்தியையும் திறமையையும் வெளிப்படுத்துகின்றன. கோயில்களின் விமானங்களும் கோபுரங்களும் பண்டைய கட்டடக்கலையின் தனித்துவமான பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

- தமிழ்நாட்டில் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக் கற்கோயில்கள், கட்டடக் கோயில்கள், கோட்டைகள், குளங்கள், சித்திரங்கள், மண்டபங்கள் என மதம்சார்ந்த மற்றும் மதச்சார்பற்ற நினைவுச் சின்னங்களும் இடம் பெற்றுள்ளன.

- இக்கோயில்களும் வரலாற்றுக் கட்டடங்களும் பல்வேறு இயற்கைப் பேரிடர்கள் மற்றும் மனித நடவடிக்கைகளால் பாதிப்புக்கு உள்ளாகின்றன. எனவே, **இந்த விலைமதிப்பற்ற பண்பாட்டு பாரம்பரியத்தைப் பாதுகாக்க இவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது**.

- தமிழ்நாட்டிலுள்ள வரலாற்றுச் சின்னங்களைப் புனரமைத்தல், பாதுகாத்தல் மற்றும் மீள்கட்டுமானம் செய்தல் ஆகியவற்றிற்காக தமிழ்நாடு அரசு **"தமிழ்நாடு பழங்கால வரலாற்றுச் சின்னங்கள் தொல்லியல் சிறப்பிடங்கள் மற்றும் எஞ்சிய சின்னங்கள் சட்டம், 1966 மற்றும் விதிகள் - 1971"** இயற்றியுள்ளது.

- மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளின்படி, **"பண்டைய வரலாற்று நினைவுச்சின்னம்"** என்பது வரலாறு, தொல்பொருள் அல்லது கலை முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் **நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான** எந்தவொரு கட்டுமானத்தையும் அல்லது சின்னத்தையும் உள்ளடக்கியது. இதில் தொல்லியல் மேடு, இடுகாடு, குகை, பாறைச் சிற்பம், கல்வெட்டு, ஒற்றைக்கல் நினைவுச்சின்னம் போன்றவையும் உள்ளடங்கும்.

- தமிழ்நாடு அரசு இதுவரை **105 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் 3 தொல்லியல் தளங்கள் ஆக மொத்தம் 108 வரலாற்றுச் சின்னங்களை** பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக அறிவித்துள்ளது. இந்த 108 வரலாற்றுச் சின்னங்களில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் மராத்தா அரண்மனை, தஞ்சாவூர் மாவட்டம் சரபேந்திரராஜபட்டினத்திலுள்ள மனோரா நினைவுச் சின்னம், மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடி கவர்னர் மாளிகை மற்றும் டேனீஷ் கோட்டை ஆகியவை அதிகளவில் சுற்றுலாப் பயணிகளை ஈரக்கும் சுற்றுலாத் தளங்களாகத் திகழ்கின்றன.

- **ஒன்றிய அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டில் இதுவரை 411 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் தளங்களை பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவித்துள்ளது**. இவற்றுள் **251 வரலாற்றுச் சின்னங்களும் 160 தொல்லியல் தளங்களும் அடங்கும்**.

## IV. தமிழிக் கல்வெட்டுகள், சமணச் சிற்பங்கள் மேம்பாடு

- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள நெகனூர்பட்டி தமிழிக் கல்வெட்டு
- விழுப்புரம் மாவட்டத்தில் தொண்டூர் தமிழிக் கல்வெட்டு
- மதுரை மாவட்டத்திலுள்ள முதலைக்குளம் தமிழிக் கல்வெட்டுகளும் சமணர் படுக்கைகளும்
- மதுரை மாவட்டத்தில் அரிட்டாபட்டி தமிழிக் கல்வெட்டுகள்.
- செங்கல்பட்டு மாவட்டம் அனந்தமங்கலத்திலுள்ள சமணச் சிற்பங்கள்.

## V. தொல்லியல் அகழாய்வுகள்

- தொல்லியல் அகழாய்வுகள் ஒரு நாட்டின் பண்பாட்டு வரலாற்றை மறுகட்டமைப்பு செய்வதற்கான ஒரு முக்கியமான அறிவியல் முறையாக கருதப்படுகின்றன.
- இந்தியாவில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் பழங்கற்காலம், புதியகற்காலம், செம்புக்காலம் மற்றும் இரும்புக்கால வாழ்விடங்களைப் பற்றி அறிந்துக்கொள்ள உதவியாக இருந்துள்ளன.
- தமிழ்நாட்டில் தற்செயலாக கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் **வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இருந்தே தமிழ்நாட்டின் வரலாறு தொடர்வது கண்டுபிடிக்கப்பட்டாலும்** முறையாக பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்பெற்ற அகழாய்வுகளின் வாயிலாகவே **தொன்மைக்கும் அண்மைக்கும் இடைநிற்கும் பெருந்திரை அகற்றப்பட்டுள்ளது**.
- தமிழகத்தில் இத்துறைக்கு ஒரு வடிவம் அளிக்கும் வண்ணம் அரும்பாடுபட்ட அயல்நாடு மற்றும் இந்திய தொல்லியலாளர்களின் அர்ப்பணிப்புகள் பதிவு செய்யப்படுவதோடு பாராட்டப்படவும் வேண்டும். **இந்திய தொல்லியலின் தந்தை திரு அலெக்சாண்டர் கன்னிங்காம், மற்றும் திருவாளர்கள் இராபர்ட் புரூஸ்புட், கர்சன், பிரபு, சர் ஜான் மார்ஷல், சர் மார்டிமர் வீலர், ரேமன்ட் ஆல்சின், V.D. கிருஷ்ணசாமி, A. கோஷ், M.N. தேஷ்பாண்டே, B.K. தாபர், S.R. ராவ், B.B. லால், H.D. சங்காலியா, V.N. மிஸ்ரா, R.S. பிஷ்த், கா. ராஜன் மற்றும் பல இந்திய ஆய்வாளர்கள்** அகழாய்வுகளில் தத்தமது தனித்தன்மையுடன் பங்களித்து இத்துறையை மேன்மையடையச் செய்திருக்கிறார்கள்.
- தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இடங்களில் தொல்லியல் சான்றுகளைக் கொண்டு, களஆய்வுகள் மற்றும் அகழாய்வுகளை மேற்கொண்டுவருகிறது. இவ்வகையில் **பரிக்குளம், திருத்தங்கல், மாங்குடி, மோதூர், கோவலன்பொட்டல், ஆனைமலை, பல்லவமேடு, போளுவாம்பட்டி, பேரூர், பனையகுளம், குரும்பன்மேடு, கண்ணனூர், திருக்கோவிலூர், வசவசமுத்திரம், பூம்புகார், தொண்டி, கொற்கை, அழகன்குளம், கரூர், பட்டரைப்பெரும்புதூர், கங்கைகொண்டசோழபுரம்** போன்ற வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் வரலாற்றுக் காலம் வரையிலான தொல்லியல் இடங்களில் அகழாய்வுகள் செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.
- இவ்வகழாய்வுகள் வாயிலாக, பண்டைய தலைநகரங்கள், வணிக மையங்கள் போன்றவை அறியப்பட்டதோடு **அக்காலத்தில் தமிழ்நாடு உரோமானியப் பேரரசு மற்றும் பிற நாடுகளுடனும்** இந்தியாவின் பிறபகுதிகளுடனும் கொண்டிருந்த வணிகத் தொடர்புகள் குறித்த தரவுகளும் வெளிக்கொணரப்பட்டுள்ளன.
- **முக்கிய தொல்லியல் அகழாய்வுகள்**

- **தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர் பறம்பில் நடைபெற்ற அகழாய்வே இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வுகளில் முதல் அகழாய்வாகும்**. இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் **மிகத் தொன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன**.

- ஜெர்மன் நாட்டில் உள்ள பெர்லின் நகரைச் சார்ந்த **முனைவர் ஜாகோர் (Dr. Jagor) என்பவர் 1876-ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூர்** பறம்பில் உள்ள புதர்களைக் களைந்து நிலத்தை அகழ்ந்து அங்குப் புதையுண்டு கிடந்த தொல்பொருட்களை எடுக்கத் திட்டமிட்டார். பெர்லின் நகரிலிருந்து கப்பலில் பயணித்து இந்தியா வந்தடைந்தார்.

- பின்னர், தொடர் வண்டி மற்றும் மாட்டு வண்டியிலும் நீண்ட நாள் பயணம் செய்து, இந்தியாவின் தென்கோடியில் உள்ள ஆதிச்சநல்லூரை அடைந்தார். இங்கு கிடைக்கப்பெற்ற அரிய தொல்பொருட்களை எடுத்துச் சென்று **பெர்லின் அருங்காட்சியகத்தில் இடம்பெறச் செய்துள்ளார்**.

- பின்னர், **பாரீஸ் நகரைச் சார்ந்த எம். லூயிஸ் லேபிக் என்பவர் 1903 – 1904 ஆம் ஆண்டு களஆய்வு** மேற்கொண்டு கூடுதல் தகவல்களைத் திரட்டினார்.

- **1903 முதல் 1904 ஆம் ஆண்டு வரை ஆதிச்சநல்லூர் பறம்பில் அலெக்சாண்டர் ரீ அகழாய்வு** நடத்தினார்.

- அலெக்சாண்டர் ரீ அகழ்ந்து எடுத்த தொல்பொருட்கள் அனைத்தும் தற்போது **சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் பொது மக்கள் பார்வைக்குச் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன**.

- **அரிக்கமேடு**

  - **செங்கடல் பயணக் குறிப்பு நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டைய நகரமான பொதுகே வணிகத்தளம் தொல்லியலின் கவனத்தை ஈர்த்தது**.

  - இத்தளத்தில் **பிரெஞ்ச் தொல்லியலாளர் கபிரியல் ஜுவே துபிரியே 1941-ஆம்** ஆண்டு **முதன்முதலில் அகழாய்வு** மேற்கொண்டார்.

  - **சர் மார்டிமர் வீலர் அறிவியல் ரீதியாக 1945-ஆம்** ஆண்டு மேற்கொண்ட அகழாய்வில் **சேமிப்புக் கிடங்குகள், உறைகிணறுகள், தொட்டிகள்** போன்ற கட்டமைப்புகளுடன் கூடிய ஒரு நகர அமைப்பை வெளிப்படுத்தினார்.

  - **பிரெஞ்ச் தொல்லியலாளர் ஜீன் கமரி கேசல்** என்பவர் **1949-ஆம் ஆண்டு** அரிக்கமேடு பகுதியைச் சுற்றியுள்ள **சுத்துக்கேணி, கோட்டைமேடு** ஆகிய இடங்களில் அகழாய்வு மேற்கொண்டார்.

  - **கி.பி. 200-க்கு முன்னர் மத்திய தரைக்கடல்** நாடுகளுக்கும் அரிக்கமேடுக்கும் இடையே நடைபெற்ற **வணிகத் தொடர்பினை** வெளிப்படுத்தினார்.

  - பின்னர், **1994-1995 ஆம் ஆண்டுகளில் பேராசிரியர் விமலா பேக்லி** அவர்களது குழுவினர் விரிவான அகழாய்வினை இத்தளத்தில் மேற்கொண்டனர்.

  - இங்கு கிடைக்கப்பெற்ற **உரோம் நாட்டு அரிட்டைன் மட்கலன்கள், சிவப்பு நிற மேசைப் பயன்பாட்டு மட்கலன்கள், மத்தியத்தரைக்கடல் மட்கலனான உடைந்த மதுசாடிகள், மணிகள், உலோகப் பொருட்கள்** ஆகிய தொல்பொருட்கள் பொதுகே என்றழைக்கப்படும் அரிக்கமேடானது **ரோம் நாட்டுடன் வலுவான வணிகத் தொடர்பினைக்** கொண்டிருந்தது என்பதை உறுதிசெய்கின்றன.

- **பூம்புகார்**

  - **காவேரிப் பூம்பட்டினம்** என்று அழைக்கப்பட்ட **செழிப்பான துறைமுக நகரமான பூம்புகார், தமிழ்நாட்டின் சங்ககால சோழ மன்னர்களின் தலைநகராக செயல்பட்டது**.

- செங்கடல் பயணக் குறிப்பு என்ற நூலில் பூம்புகார் குறித்தான குறிப்புக் காணப்படுகிறது.
- இந்திய தொல்லியல் துறையைச் சார்ந்த தொல்லியலாளர் திரு கே.வி. சௌந்தரராஜன் 1960 மற்றும் 1970 களில் ஆய்வு மேற்கொண்டார்.
- பின்னர், **1991-ஆம் ஆண்டு** தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மற்றும் தேசிய கடல்சார் ஆய்வு நிறுவனம் இணைந்து **ஆழ்கடலாய்வு நடத்தி கடற்கரையிலிருந்து 200 முதல் 300 மீட்டர் தொலைவில் ஒரு வரிசையான செங்கல் கட்டுமானத்தை வெளிப்படுத்திய**து.

1. **தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் - 2023**

| வ.எண் | அகழாய்வுத் தளம் | மாவட்டம் | விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | கீழடி மற்றும் கொந்தகை | சிவகங்கை | ஒன்பதாம் கட்டம் |
| 2 | கங்கைகொண்ட சோழபுரம் | அரியலூர் | மூன்றாம் கட்டம் |
| 3 | வெம்பக்கோட்டை | விருதுநகர் | இரண்டாம் கட்டம் |
| 4 | துலுக்கர்பட்டி | திருநெல்வேலி | இரண்டாம் கட்டம் |
| 5 | கீழ்நமண்டி | திருவண்ணாமலை | இரண்டாம் கட்டம் |
| 6 | பொற்பனைக் கோட்டை | புதுக்கோட்டை | முதல் கட்டம் |
| 7 | பூதிநத்தம் | தருமபுரி | முதல் கட்டம் |
| 8 | பட்டறைப் பெரும்புதூர் | திருவள்ளூர் | மூன்றாம் கட்டம் |

2. **கீழடி அருங்காட்சியகம், சிவகங்கை மாவட்டம்**

- **கீழடி அகழாய்வின் ஒன்பதாம் கட்டத்தில் பதினான்கு அகழாய்வுக் குழிகளில் தங்க அணிகலன்கள், தந்தத்தால் செய்யப்பட்ட பகடைகள், சுடுமண்ணால் ஆன விலங்கு உருவங்கள், ஆட்டக்காய்கள், வட்டச்சில்லுகள், பளிங்கு கல்லினால் ஆன எடைக்கல், கண்ணாடி மணிகள், வளையல் துண்டுகள், செப்பு நாணயங்கள், செப்பு ஊசிகள், எலும்பு முனைகள் மற்றும் இரும்பு ஆணிகள் உள்ளிட்ட 804 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன**.
- மேலும், ஓர் அகழாய்வுக் குழியில் 3 முதல் 6 செ.மீ தடிமனுடன் கூடிய களிமண் மற்றும் சுண்ணாம்பு கலவைக் கொண்ட தரைத்தளம் சுமார் 35 செ.மீ ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இத்தரைத்தளத்தின் கீழ் இரண்டு அடி ஆழத்தில் **கருப்பு-சிவப்பு மட்கலன்கள், சிவப்பு பூச்சுப் பெற்ற மட்கலன்கள், சிவப்பு நிற மட்கல ஓடுகள்** ஆகியவை குவியலாக கண்டறியப்பட்டன.
- இவைதவிர, இந்த மட்கலக் குவியலில் துளையிடப்பட்ட பானை ஓடுகள், **அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள், சிவப்பு வண்ணம் பூசப்பட்ட பானை ஓடுகள் மற்றும் உரோம் நாட்டு பானை ஓடுகளும்** கிடைக்கப்பெற்றன.
- இவற்றில் **மீன, ஏணி மற்றும் வடிவியல் குறியீடுகள்** பொறிக்கப்பட்ட **200 எண்ணிக்கையிலான** மட்கல ஓடுகள் கண்டறியப்பட்டன.

3. **கொந்தகை அகழாய்வு – நான்காம் கட்டம் - 2023**

- கொந்தகையில் **24 ஈமத்தாழிகளுக்குள் இருந்து 110க்கும் மேற்பட்ட கருப்பு-சிவப்பு நிற மட்கலன்கள், சிவப்பு பூச்சுப்பெற்ற மட்கலன்கள் ஆகியவற்றுடன் மனித எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன**.
- மேலும் **சூதுபவள மணிகள், இரும்புக் கத்திகள், உளிகள், மோதிரங்கள்** போன்றவையும் எடுக்கப்பட்டன. முதன்முறையாக, ஓர் ஈமத்தாழிக்குள் இருந்து தந்தத்தால் செய்யப்பட்ட மோதிரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

4. **கங்கைகொண்டசோழபுரம் - மூன்றாம் கட்டம் 2022 – 2023**

- **அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் கங்கைகொண்டசோழபுரம் அமைந்துள்ளது. புகழ்பெற்ற மாமன்னன் முதலாம் இராஜராஜ சோழனின் (கி.பி. 985-1014) மகனான மாமன்னன் முதலாம் இராஜேந்திர சோழனால் (கி.பி. 1012-1044)** இவ்வூர் சோழர்களின் தலைநகராக நிறுவப்பட்டது.

- கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயிலுக்கு தென்மேற்கே 2 கி.மீ தொலைவிலும், உட்கோட்டைக்கு தென்கிழக்கில் சுமார் 2 கி.மீ தொலைவிலும் அகழாய்வுத் தளமான **மாளிகைமேடு** என்னும் அரண்மனை மேடு அமைந்துள்ளது.

- இதுவரை, மாளிகைமேடு அகழாய்வில் மிகப்பெரிய செங்கல் கட்டுமானம், கூரை ஓடுகள், ஏராளமான தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- செங்கல் கட்டுமானத்துடன் கூரை ஓடுகள் மற்றும் பானை ஓடுகளும் காணப்பட்டன. இரும்புப் பொருட்கள், செப்புப் பொருட்கள், செப்பு நாணயங்கள், வெள்ளி நாணயம், தங்கக் காப்பு, தந்தத்தினால் ஆன பொருட்கள், கண்ணாடி மணிகள் மற்றும் வளையல்கள், வட்டச்சில்லுகள், சுடுமண் பொருட்கள் மற்றும் சீன நாட்டு செலடன் மற்றும் பீங்கான் வகை மட்கலன்கள் போன்ற தொல்பொருட்களும் சேகரிக்கப்பட்டன.

- இந்த கண்டுபிடிப்புகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சீன நாட்டுடனான தொடர்புகளை அறிந்துக்கொள்ள உதவுகின்றன.

- இப்பருவத்தில் உட்கோட்டை என்ற இடத்தில் அகழாய்வு மேற்கொண்டபோது 7 மீட்டர் நீளமும், 72 செ.மீ அகலமும் கொண்ட கருங்கல் தூண் கண்டெடுக்கப்பட்டது.

- இத்தூணில் கிரந்த எழுத்துகளில் **“ஷ-த்-ரி-ய”** என்று எழுதப்பட்டுள்ளது.

5. **வெம்பக்கோட்டை இரண்டாம் கட்ட அகழாய்வு**

- **விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வட்டத்தில் வைப்பாறு ஆற்றின் வடகரையில் சிவகாசி – கழுகுமலை** சாலையில் சிவகாசியிலிருந்து 15 கி.மீ தொலைவிலும், கழுகுமலையிலிருந்து தெற்கே 23 கி.மீ. தொலைவிலும் வெம்பக்கோட்டை கிராமம் அமைந்துள்ளது.

- **மேட்டுக்காடு அல்லது உச்சிமேடு என்றழைக்கப்படும்** மேட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில், இத்தளம் இடைக்காலம் முதல் தொடர்ச்சியான வாழ்விடப்பகுதியாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

- மேலும், பல்வேறு **வண்ண கண்ணாடி மணிகள், சங்கு வளையல்கள், சுடுமண்ணால் ஆன மணிகள், ஆட்டக்காய்கள், புகைபிடிக்கும் குழாய்கள், பதக்கங்கள், உருவங்கள், எடைக்கற்கள், பந்துகள், முத்திரைகள், வட்டச்சில்லுகள், சக்கரங்கள், இரும்புப் பொருட்கள், செப்புப் பொருட்கள்** மற்றும் **எட்டு செப்பு நாணயங்கள்** ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

- மேலும், இங்கு அதிக எண்ணிக்கையிலா அலங்கரிக்கப்பட்ட **சங்கு வளையல்கள், முழுமை பெறாத சங்கு வளையல்கள், உடைந்த சங்கின் பாகங்கள்** கிடைப்பதின் மூலம் சங்கு வளையல் தயாரிக்கும் தொழிற்சாலை இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

6. **தலுக்கர்பட்டி அகழாய்வுகள் - இரண்டாம் கட்டம் - 2022 – 2023**

- **திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம்** மாவட்டத் தலைமையகத்திலிருந்து சுமார் 45 கி.மீ தொலைவில் **துலுக்கர்பட்டி தொல்லியல் தளம் அமைந்துள்ளது**.

- உடைந்த தங்க மோதிரத்தின் பாகம், வெள்ளி முத்திரையிடப்பட்ட நாணயம், தந்தப் பொருட்களும், கண்ணாடி, சுடுமண், சூதுபவளம், சோப்புகல், அகேட், செவ்வந்தி, பளிங்கு மற்றும் நுரைக்கல் ஆகியவற்றால் செய்யப்பட்ட மணிகளும், ஆணிகள், குத்துவாள்கள், கத்திகள், மோதிரங்கள், ஈட்டி முனைகள் மற்றும் உளிகள் போன்ற இரும்புப் பொருட்களும், ஆண்டிமனி கம்பி, வளையல் துண்டு மற்றும் சுடுமண்ணால்

ஆன வட்டச்சில்லுகள், பந்துகள், மணிகள், எறியும் கருவிகள், ஆட்டக்காய்கள், சுடுமண் உருவங்கள் மற்றும் சுடுமண் சக்கரங்கள் சேகரிக்கப்பட்டன.

- இவ்விரு கட்டங்களிலும் ஓரிரு தமிழி எழுத்துப் (தமிழ்-பிராமி) பொறிக்கப்பட்ட 12 பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன. ஏறத்தாழ 4800 குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.

7. **கீழ்நமண்டி அகழாய்வு – முதல் கட்டம் 2022-2023**

    - **கீழ்நமண்டி கிராமம், திருவண்ணாமலை மாவட்டத்தில், வந்தவாசி வட்டத்தில் அமைந்துள்ளது**.
    - மேற்பட்ட **பெருங்கற்காலக் கல் வட்டங்கள்** உள்ளன. சில சேதமடைந்த கல் வட்டங்களுக்குள் ஈமப்பேழையின் எச்சங்கள் காணப்படுகின்றன.
    - புதைவிடப் பகுதியில் மொத்தம் **21 ஈமப்பேழைகள் கண்டறியப்பட்டன** அவற்றில் **6 ஈமப்பேழைகள் மட்டுமே** முழுமையான நிலையில் உள்ளன, மற்றவை உடைந்தநிலையில் காணப்படுகின்றன.
    - புதைவிடப் பகுதியில் **30க்கும் மேற்பட்ட கீறல்** குறியீட்டுப் **பானை ஓடுகள்**, 43 தொல்பொருட்கள் **கண்டெடுக்கப்பட்டுள்ளன**.
    - வாழ்விடப் பகுதியில் 45 கீறல் குறியீட்டுப் பானை ஓடுகள், 46 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
    - புதைவிடப் பகுதியில் இருந்து சுமார் **500 மீட்டர்** தொலைவில் ஒரு சிறிய குன்றின் மேல் 30க்கும் மேற்பட்ட கற்கோடாரி பட்டைதீட்டும் பள்ளங்கள் காணப்படுகின்றன.
    - தற்போது, இவ்விடத்தின் பல்வேறு பண்பாட்டுக் காலவரிசையைப் புரிந்து கொள்ளுதல், புதிய கற்காலத்திலிருந்து இரும்புக் காலக் கட்டத்திற்கு மாறிய பண்பாட்டு மாற்றத்தைப் புரிந்து கொள்ளுதல், இரும்பு உருக்கும் தொழில்நுட்பம், இரும்புக் கால மக்களின் ஈம பழக்க நடைமுறைகளை மதிப்பிடுதல், பெருங்கற்கால இடங்களைச் சரியான தொல்லியல் சூழலில் அடிப்படையில் அடையாளம் காணுதல் இந்த அகழாய்வின் நோக்கமாகும்.

8. **பொற்பனைக்கோட்டை அகழாய்வு – முதல் கட்டம் 2022-2023**

    - **பொற்பனைக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டத்தில் மணிமங்கலம், ஆலங்குடி இடையே அமைந்துள்ளது.**
    - **செங்கல்லின் அளவு, நினைவுக் கல், கருப்பு-சிவப்பு பானை ஓடுகள், குறியீட்டு அடையாளங்கள், பிராமி பொறிக்கப்பட்ட பானை ஓடுகளின் வாயிலாக இந்த இடம் சங்க காலத் தொல்லியல் தளமாக அறியப்படுகிறது.**
    - **ஆறு இதழ் கொண்ட தங்க மூக்குத்தி/தோடு என 533 தொல்பொருட்களும்,** கீறல் குறியீடுகளும், தமிழி (தமிழ் பிராமி) எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்கல ஓடு ஆகியவை கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
    - இதன் அடிப்படையில், **ஏராளமான இரும்புக் கசடுகள்**, சுடுமண் குழாய்கள், உலைகள் கிடைப்பது **தொடக்க வரலாற்றுக் காலங்களிலும் இடைக்காலத்திலும் இரும்புத் தொழில் முழு வீச்சில் இருந்தது என்பதைக் குறிக்கிறது. இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவது இந்த அகழாய்வின் நோக்கமாகும்**.
    - **வட்ட வடிவ செங்கல் கட்டுமானம்**
        - **தமிழ்நாட்டில் வரலாற்றுத் தொடக்கக் காலம் மற்றும் வரலாற்றுக் காலங்களில் அதிகளவு கட்டட அமைப்புகள் கிடைத்திருக்கின்றன**.

- பொற்பனைக்கோட்டையில் வட்ட வடிவ சுட்ட செங்கற் கட்டுமானம் 39 செ.மீ ஆழத்தில் கண்டறியப்பட்டது.

- வடமேற்கு பகுதியில் தொடங்கி தென்கிழக்காக மூன்று அடுக்கினைக் கொண்டுள்ளது.

**9. பூதிநத்தம் அகழாய்வு – முதல் கட்டம் 2022-2023**

- தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டத்தில் பூதிநத்தம் எனும் கிராமம் அமைந்துள்ளது. **இவ்வாழ்விடப் பகுதியானது மேடாகவோ சமதளமாகவோ அல்லாமல் இயற்கையான ஏற்ற இறக்கங்களுடன் காணப்படுகிறது**.

- அகழாய்வுக் குழிகளில் பெரும்பாலும் சிவப்பு மற்றும் சிவப்பு வண்ணப்பூச்சுப் பெற்ற பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன. இவை தவிர, ஒரு சில கருப்பு-சிவப்பு நிறப் பானை ஓடுகளும் கண்டறியப்பட்டன.

- அகழாய்வுத் தளத்திலிருந்து பெறப்பட்ட தொல்பொருட்கள் பெரும்பாலும் சுடுமண் வகையைச் சார்ந்தவை. புதிய கற்காலத்தின் வெளிப்படாத அகழாய்வுக் குழியின் கீழ் மட்டத்தில் டாலரைட் கற்களால் செய்யப்பட்ட சில கைக்கோடரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**10. பட்டறைப்பெரும்புதூர் மூன்றாம் கட்ட அகழாய்வு 2022-2023**

- **பட்டறைப்பெரும்புதூர் திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூரிலிருந்து மேற்காக சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது**.

- கற்கருவிகள், செம்புப் பொருட்கள், இரும்புக் கருவிகள், எலும்பு மற்றும் கண்ணாடியினால் செய்யப்பட்ட மணிகள், துபவள மணிகள், சங்கு வளையல்கள், வட்டச்சில்லுகள், கண்ணாடி வளையல் துண்டுகள், அரிய கல்மணிகள், சுடுமண் உருவங்கள், தேய்ப்பு கற்கள் உள்ளிட்ட தொல்பொருட்கள் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை கற்கருவிகள் வகையைச் சார்ந்தவை.

- கற்காலம் முதல் தொடக்க வரலாற்றுக் காலம் வரையிலான அனைத்துக் கூறுகளும் இத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தொல்பொருட்கள், மட்பாண்டங்கள், செங்கற்களால் கட்டப்பட்ட கிணறு போன்றவை இந்த தளம் மிக முக்கியமான குடியிருப்புப் பகுதியாக இருந்துள்ளதை வெளிக்காட்டுகின்றன.

**11. மணலூர்**

- 2020 மே மாதத்தில் மணலூரில் அகழ்வாராய்ச்சி பணிகள் தொடங்கப்பட்டன, இதுவரை 4 அகழிகள் போடப்பட்டு அதில் 6 நான்கு பகுதிகள் திறக்கப்பட்டுள்ளன.

- **தற்போது, புகைபிடிக்கும் குழாய்கள், மணிகள், சூடுமண்ணால் சக்கரங்கள், வட்டச்சில்லுகள், மற்றும் கட்டமைப்பு செயல்பாட்டின் பண்புகள் போன்ற தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன**.

**12. சிவகளை**

- **ஆதிச்சநல்லூருக்கு அருகிலுள்ள சிவகளையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் ஈமத்தாழி ஒன்றில் சேகரிக்கப்பட்ட நெல் மாதிரியினை** அமெரிக்காவில், புளோரிடாவின் மியாமியில் உள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்தால் பகுப்பாய்வு செய்யப்பட்டதில் அதன் காலம் கி.மு. 1155-க்கு முந்தையவை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

- இக்காலக்கணக்கீடு பொருநை (தாமிரபரணி) ஆற்றங்கரை நாகரிகம் **3200 ஆண்டுகள் பழமையானது** என்பதை அறிவியல் அடிப்படையில் உறுதிப்படுத்துகிறது.

## VI. தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் - 2024

- தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் விரிவான தொல்லியல் களஆய்வுகள் / அகழாய்வுகள் மற்றும் **ஆழ்கடல் களஆய்வுகள் / அகழாய்வுகள்** ரூ. 5 கோடி வரவு-செலவு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

- இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மிக அதிக அளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2024-ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசின் பரிந்துரையுடன் எட்டு தொல்லியல் அகழாய்வு முன்மொழிவுகள், **மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA)** நிலைக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

- வெம்பக்கோட்டை அகழாய்வுப் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 18.06.2024 அன்று காணொலி வாயிலாக தொடங்கிவைக்கப்பட்டது.

| வ.எண் | தொல்லியல் தளம் | மாவட்டம் | விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | கீழடி மற்றும் கொந்தகை | சிவகங்கை | பத்தாம் கட்டம் |
| 2 | வெம்பக்கோட்டை | விருதுநகர் | மூன்றாம் கட்டம் |
| 3 | கீழ்நமண்டி | திருவண்ணாமலை | இரண்டாம் கட்டம் |
| 4 | பொற்பனைக்கோட்டை | புதுக்கோட்டை | இரண்டாம் கட்டம் |
| 5 | திருமலாபுரம் | தென்காசி | முதலாம் கட்டம் |
| 6 | சென்னானூர் | கிருஷ்ணகிரி | முதலாம் கட்டம் |
| 7 | கொங்கல்நகரம் | திருப்பூர் | முதலாம் கட்டம் |
| 8 | மருங்கூர் | கடலூர் | முதலாம் கட்டம் |

## VII. அகழாய்வு மேற்கொள்ளப்படும் புதிய தொல்லியல் தளங்கள் - 2024

### 1. திருமலாபுரம் - தென்காசி மாவட்டம்

- திருமலாபுரம், சிவகிரி வட்டம், தென்காசி மாவட்டம், பெருங்கற்கால இடுகாடு தற்போதைய திருமலாபுரம் கிராமத்திற்கு வடமேற்கே 5.7 கி.மீ தொலைவில் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

- எலும்புகள், ஈமத் தாழிகள் மற்றும் வெண்கலக் கிண்ணம், ஈட்டி, வாள், வில், அம்புமுனைகள் போன்ற தொல்பொருட்கள், படையல் பானைகள் போன்ற எச்சங்கள் இருந்தன. கருப்பு-சிவப்பு நிற மட்கலன்கள், கருப்பு நிற மட்கலன்கள், தாழிகள் போன்ற பானை மட்கல வகைகளும் காணப்பட்டன.

- இவ்விடத்திலிருந்து கணிசமான அளவு மட்பாண்டங்கள் சேகரிக்கப்பட்டன. அவற்றில் கருப்பு-சிவப்பு நிற மட்கலன்கள், சிவப்புப் பூச்சுப் பூசப்பட்ட மட்கலன்கள், கருப்பு நிற மட்கலன்கள், வெண்மை நிற வண்ணம் பூசப்பட்ட கருப்பு – சிவப்பு நிற மட்கலன்கள் ஆகியவை அடங்கும். இந்த தொல்லியல் பகுதி பெருங்கற்கால ஈடச்சின்னங்கள் மற்றும் இரும்புக் கால குடியேற்றங்கள் பற்றிய ஏராளமான சான்றுகளை நமக்குத் தருகின்றன.

- மேலும், இங்கு மேற்கொள்ளப்படவுள்ள முறையான அகழாய்வு இந்த வட்டாரத்திலும் அதைச் சுற்றியுள்ள வரலாற்றுக்கு முந்தைய மற்றும் இரும்புக் காலத் தளங்களைக் கண்டறியவும், பண்பாட்டுக் காலவரிசையையும் அறிய உதவும்.

### 2. சென்னானூர் - கிருஷ்ணகிரி மாவட்டம்

- **கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில்** வரலாற்றுச் சிறப்பு மிக்க கிராமமான சென்னானூர் கிருஷ்ணுகிரியிலிருந்து தென்கிழக்கே சுமார் 50 கி.மீ தொலைவிலும் ஊத்தங்கரையிலிருந்து வடக்கே 14 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

- இத்தொல்லியல் மேடானது சுமார் 2.5 மீ அளவுக்கு தொல்லியல் எச்சங்களைத் தாங்கி நிற்கிறது.

- இத்தொல்லியல் மேட்டில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் கருப்பு-சிவப்பு பானை ஓடுகள், கருப்பு வண்ணப் பானை ஓடுகள், சிவப்பு வண்ணப் பூச்சுப் பானை ஓடுகள் மற்றும் சொர சொரப்பான சிவப்பு நிற பானை ஓடுகள் அதிகளவில் காணப்படுகின்றது.

- இவை தவிர, நுண் கற்காலத்தைச் சார்ந்த கருவிகள், புதிய கற்காலத்தைச் சார்ந்த கற்கருவிகள், வட்டச் சில்லுகள், சுடுமண் விளக்கு, தக்களி போன்றவை இத்தொல்லியல் மேட்டில் கண்டெடுக்கப்பட்டன.

- தொல்லியல் மேட்டின் அருகில் உள்ள மலையில் மூன்று குகைகளில் வெண்மை நிற பாறை ஓவியங்கள் கணடறியப்பட்டுள்ளன.

### 3. கொங்கல்நகரம் - திருப்பூர் மாவட்டம்

- கொங்கல்நகரம் கிராமம் உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்கிராமமானது கொங்கல்நகரம் ஊராட்சியில் பொள்ளாச்சி-தாராபுரம் சாலையில் பொள்ளாச்சிக்குக் கிழக்கே 25 கிமீ தொலைவில் அமைந்துள்ளது.

- சேரர் தலைநகரான வஞ்சியையும் அமராவதியும் காவிரியும் சந்திக்கும் நகரமான கரூரையும் இணைக்கும் கொங்கப் பெருவழி என்ற புகழ்பெற்ற பண்டைய கால வணிகப் பெருவழி கொங்கல்நகரம் வழியாகச் செல்கிறது.

- கொங்கல் நகரத்தில் உள்ள வாழ்விடம் மற்றும் புதைவிடப் பகுதிகளில் நடத்தப்பட்ட கள ஆய்வுகளில் குறியீடுகள் மற்றும் தமிழி (தமிழ் - பிராமி) எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், மேலும் ஏராளமான செவ்வண்ணப் பூச்சுப்பெற்ற மட்கலன்கள் மற்றும் கருப்பு-சிவப்பு நிற மட்கலன்கள் கிடைக்கப்பெற்றன.

- இதன் அடிப்படையில் குறியீடுகள் மற்றும் தமிழியின் தோற்றத்தைக் கண்டறியவும், அதன் மண்ணடுக்கு மற்றும் கால வரிசையை ஆய்வு செய்யவும், சாத்தியமான தொல்லியல் தளமாகக் கருதப்படுகிறது.

### 4. மருங்கூர் - கடலூர் மாவட்டம்

- **மருங்கூர் ஊரானது வட்டத் தலைநகரான பண்ருட்டியிலிருந்து 12 கி.மீ. தொலைவிலும், மாவட்ட தலைநகரான கடலூரிலிருந்து மேற்கே 32 கி.மீ. தொலைவிலும் உள்ளது**.

- தமிழி எழுத்துப் (தமிழ்-பிராமி) பொறிக்கப்பட்ட இரண்டு பானை ஓடுகள் மேற்பரப்பில் இருந்து சேகரிக்கப்பட்டன. ஒன்றில் "**அ-ம-ன**" என்றும் மற்றொன்றில் "**அ-த**" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

## VIII. புதிய கற்கால இடங்கள் களஆய்வு

- தமிழ்நாட்டில் புதிய கற்கால இடங்களைக் கண்டறிய, தொல்லியல் துறை, சர்மா பாரம்பரியக் கல்வி மையத்துடன் இணைந்து, கிழக்குத் தொடர்ச்சி மலையில் வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்டங்களில் ஆய்வுகள் மற்றும் அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

- இதன் முற்கட்ட நடவடிக்கையாக தள அமைப்புகள், புவி-ஆயத்தொலைவுகள் மற்றும் அவற்றின் புவியியல், புவியியல் மற்றும் நில வடிவமைப்பு பற்றிய தகவல்களைச் சேகரிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மேற்கண்ட ஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் வல்லுநர் குழுவால் நடத்தப்பட்டது.

- இந்த கள ஆய்வுகள் தொல்லியல் மற்றும் புவியியல் / நில வடிவமைப்பு அம்சங்களை உள்ளடக்கியது. கள ஆய்வின் போது, கைக்கோடரி உற்பத்தி தளங்கள் அடையாளம் காணப்பட்டன.

- மேலும் கைக்கோடரிகளை பளபளப்பாக்குவதற்கான தேய்ப்பு பள்ளங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டன. மேலும், ஆய்வுக்காக பல மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. அம்மாதிரிகள் தற்போது, இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் (IGCAR) உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

### IX. பொருநை (தாமிரபரணி) ஆற்றுப் படுகையில் கள ஆய்வு

- தாமிரபரணி என்று அழைக்கப்படும் பொருநை ஆறு, தென்னிந்தியாவின் குறிப்பிடத்தக்க மலைத்தொடரான மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்மேற்கு சரிவுகளில் அமைந்துள்ள பொதிகை மலையில் உற்பத்தியாகிறது.

### X. சங்ககால கொற்கை துறைமுகத்தின் கரையோர முன்கள ஆய்வு

- இந்தியாவின் நீண்ட கடற்கரை ஹரப்பா காலத்திலிருந்து கடல்வழி வணிகத்தில் முக்கியப் பங்காற்றியது. துறைமுகம் சார்ந்த வணிக நடவடிக்கைகளில் பெரும்பாலானவை தொடக்க வரலாற்றுக் காலத்திலிருந்தே காணப்படுகின்றன.

- உற்பத்தி முறை, வணிகவழிகளின் உருவாக்கம், கரிம மற்றும் கனிமற்ற இயற்கை வளங்களின் சுரண்டல், கி.மு. 6ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் புதிய அரசியல் ஒழுங்கின் தோற்றம், புதிய கடற்பயண நுட்பங்கள், வெளி உலகின் இருப்பைப் புரிந்துகொள்வது, மொழி மற்றும் எழுத்து வடிவத்தின் வளரச்சி, அயல்நாட்டுத் தொடர்புகள் மற்றும் இதுபோன்ற பல இணக்கமான காரணிகள் இந்தியா முழுவதிலும் தலைநகரங்கள் மற்றும் துறைமுக நகரங்களின் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றன.

- குடியிருப்பு மேடுகள், பாறையில் வெட்டப்பட்ட குகைகள், கட்டுமானக் கோயில்கள் மற்றும் மேற்பரப்புக்கு மேல் வெளிப்படும் கட்டடங்கள் போன்ற பல உறுதியான சான்றுகள் நிலத்தில் அடையாளம் காண இயலும் மற்றும் ஒரு தளத்தின் வளர்ச்சியைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

- இந்த உறுதியான சான்றுகள் நிலத்தில் மட்டுமின்றி, கடலிலும் அடையாளம் காண இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடலில் மூழ்கியுள்ள தொல்லியல் சான்றுகள் போர்கள், மனித காழ்ப்புணர்ச்சி மற்றும் அழிவுகளிலிருந்து பாதுகாக்க வாய்ப்புகள் உள்ளன. ஆனால், அதே நேரம் கடலில் மூழ்கி அவற்றைக் கண்டுபிடித்து ஆய்வு செய்வது கடினம்.

- வளர்ந்த நாடுகளைப் போல் அல்லாமல், இந்தியத் துணைக் கண்டம் கடல் அகழாய்வுத் துறையில் ஒப்பீட்டளவில் ஆராயப்படாமல் உள்ளது.

- இந்தியளவில் இதுவரை கடல் அகழாய்வில் ஆறு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால், இவற்றின் முழுமையான வரைபடம், விளக்கம் மற்றும் நிலப்பகுதிச் சான்றுகளுடன் ஒருங்கிணைக்கப்படவில்லை. இவற்றுள் குஜராத்தில் துவாரகா, தமிழ்நாட்டில் மாமல்லபுரம் மற்றும் பூம்புகார், கேரளாவில் முசிறி (பட்டினம்) ஆகியவை நிலம் மற்றும் கடல் இரண்டிலும் கவனத்தை ஈர்த்த தளங்களாகும். பாரிகாசா (மகாராஷ்டிரா), தொண்டி (கேரளா), கொற்கை, அழகன்குளம் மற்றும் அரிக்கமேடு (தமிழ்நாடு), கோட்டப்பட்டினம் (ஆந்திரா), கலிங்கப்பட்டினம் (ஒடிசா) மற்றும் தாமிரலிப்தி (மேற்கு வங்காளம்) போன்ற பல பழங்காலத் துறைமுகங்கள் இன்னும் ஆராய்ச்சியாளர்களால் வெளிக்கொணரப்படாமல் உள்ளன.

- இவற்றைத் தவிர, 7500 கி.மீ. க்கும் அதிகமான கடற்பரப்பு இருந்தும் காலனித்துவத்திற்கு முந்தைய கப்பல் விபத்துகள் எதுவும் இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாற்றில் பதிவு செய்யப்படவில்லை.

- தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, **இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம்** ஆகியவற்றுடன் இணைந்து, இடைச் சங்க காலப் பாண்டியர்களின் கொற்கைத் துறைமுகத்தை அடையாளம் காண, முதற்கட்டமாக முன்கள ஆய்வு மேற்கொண்டது.

### XI. மாநிலத்திற்கு வெளியே தொல்லியல் ஆய்வுகள் / அகழ்வாராய்ச்சிகள்

- பண்டைய தமிழர்களின் வரலாற்றுத் தடயங்களை கண்டறியும் வகையில், தமிழ்நாட்டிற்கு வெளியே உள்ள முக்கிய இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் / அகழாய்வுகள் நடத்தப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

- கேரளாவில் முசிறி (பட்டணம்), ஒடிசாவின் பாலூர், ஆந்திராவின் வெங்கி மற்றும் கர்நாடகாவின் மஸ்கி ஆகியவை இதில் அடங்கும்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9-ஆம் நாளன்று, இந்தியா மற்றும் அதற்கு அப்பால் தமிழ்ப் பண்பாட்டு வேர்களைக் கண்டறிய தொல்லியல் துறை இத்தகைய பயணங்களை மேற்கொள்ளும் என்று அறிவித்தார்கள்.

- தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, ஒடிசா கடல்சார் மற்றும் தென்கிழக்கு ஆசிய ஆய்வுகள் நிறுவனம் ஆகியவை 2024-ஆம் ஆண்டில் ஒடிசாவின் பாலூரில் அகழ்வாராய்ச்சியை நடத்தின. அகழ்வாராய்ச்சியின் போது 600-க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- இதில் கண்ணாடி மணிகள், வளையல்கள், இரும்பு மற்றும் செம்பு பொருட்கள் அடங்கும். இத்தளத்தில் ரௌலட்டட் வகை மட்கலன்கள், கருப்பு-சிவப்பு நிற மட்கலன்கள், வடக்கத்திய மெருகூட்டப்பட்ட கருப்பு நிற மட்கலன்கள், சிவப்புப் பூச்சுப் பூசப்பட்ட மட்கலன்கள் போன்ற மட்கல வகைகள் கிடைத்துள்ளன.

- அகழாய்வின் முக்கிய கண்டுபிடிப்பாக குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

- இந்த அகழாய்வின் நோக்கமானது தமிழ்நாடு மற்றும் ஒடிசா பகுதிகளுக்கிடையேயான உறவைக் கண்டறிவதாகும். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்களை ஆய்வுக்குட்படுத்தி கிடைக்கின்ற முடிவுகள் இவ்விரு பகுதிகளுக்கும் இடையேயான உறவை வெளிப்படுத்தும்.

- கேரளாவில், சேர நாட்டின் தொன்மை மற்றும் பண்பாட்டு வேர்களைப் புரிந்து கொள்ள, கேரள தொல்லியல் வல்லுநர்களுடன் முசிறியில் (பட்டணம்) ஆராய்ச்சி நடத்தப்படும். மேலும், ஆந்திராவில் வெங்கி, கர்நாடகாவில் மஸ்கி ஆகிய இடங்களில் அம்மாநில தொல்லியல் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும்.

- இந்த ஆய்வுகள், கேரளாவில் உள்ள பாமா, ஹைதராபாத் மத்தியப் பல்கலைக்கழகம் மற்றும் கரந்நாடகாவின் மத்தியப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை ஆகியவற்றுடனான ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளது. கர்நாடகாவில் மஸ்கிக்கான கூட்டுக் கள ஆய்வுகள் கடந்த மாதம் நடத்தப்பட்டன.

- மேலும், கர்நாடக மத்தியப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை, ஒன்றிய அசை தொல்லியல் துறைக்கு விரைவில் கருத்துரு அனுப்பப்படவுள்ளது.

### XII. ஆறிவியல் ஆய்வுகள்

- **தரை ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு (GPR), காந்த அளவியல் மதிப்பாய்வு, ஆளில்லா வான்வழி ஊர்தி மதிப்பாய்வு மற்றும் LiDAR ஆய்வு**

    - லக்னோவில் உள்ள தொல்தாவர பீர்பால் சகானி நிறுவனம் மற்றும் பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து மகரந்தப் பகுப்பாய்வு, தொல் புவி தட்ப வெப்ப நிலை மற்றும் தாவர எச்சங்கள் குறித்து ஆய்வுச் செய்யப்படுகிறது.

    - மனித மரபணு இயக்கவியலை ஆராய, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து டி.என்.ஏ. பகுப்பாய்வு நடத்தப்படுகிறது.

    - இரும்பு, எ.ஃ.கு மற்றும் உயர் தகரம் கொண்ட வெண்கல தொழில்நுட்பங்களைப் புரிந்துகொள்ள பெங்களூருவில் உள்ள தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனத்துடன் இணைந்து உலோகவியல் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

- கல்பாக்கத்தில் உள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் மற்றும் புனே பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மூலம் மட்கலன்களின் மூலப் பொருள்களை அறிந்து கொள்ள மட்கலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

- புனே டெக்கான் கல்லூரியுடன் இணைந்து அகழாய்வில் கிடைக்கப்பெற்ற எலும்புகள் மூலம் சமூக மானிடவியல் பற்றி ஆராயப்படுகிறது.

- புனேவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து பாசிகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### XIII. கீழடி அருங்காட்சியகம், சிவகங்கை மாவட்டம்

- சிவகங்கை மாவட்டம், கொந்தகையில் உலகத்தரம் வாய்ந்த கீழடி அருங்காட்சியகம் கட்டப்பட்டது.

- அருங்காட்சியக வளாகம் ஆறு முக்கிய தொகுதிகளாகப் பிரக்கப்பட்டுள்ளது.

    1. வைகை மற்றும் கீழடி,
    2. வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மை
    3. கலம் செய் கோ
    4. ஆடை அணிகலனும்
    5. கடல் வழி வணிகம்
    6. வாழ்வும் வளமும்

- ஆகிய கருப்பொருளின் அடிப்படையாகக் கொண்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த வளாகம், மக்களின் மரபுசார் ஈடுபாட்டினை அதிகரிக்கும் வகையில் மரபுசார் பொழுதுபோக்குகள், கைவினைப் பட்டறைகள் மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏற்ற திறந்தவெளிகள் அமைக்கப்பட்டுள்ளது.

### XIV. கீழடி திறந்தவெளி அகழ்வைப்பகம், சிவகங்கை மாவட்டம்

- கீழடியில் நடந்த அகழாய்வில் பண்டைய கட்டடங்கள், உறைகிணறுகள் உள்ளிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டுமானங்கள் வெளிப்பட்டுள்ளன.

- இந்த குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளை உயிர்ப்பிக்க, ஒரு திறந்தவெளி தள அருங்காட்சியகம் உருவாக்கப்படும். இது ஒரு முழுமையான கல்வி அனுபவத்தை வழங்கும்.

- இந்த அருங்காட்சியகம் கீழடியின் வரலாற்று முக்கியத்துவத்தை தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கு அறிவூட்டும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளது.

### XV. பொருநை அருங்காட்சியகம், திருநெல்வேலி மாவட்டம்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.09.2021 அன்று சட்டப்பேரவையில் சிவகளை, கொற்கை மற்றும் ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களைக் காட்சிப்படுத்தும் வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய “பொருநை அருங்காட்சியகம்” திருநெல்வேலியில் அமைக்கப்படும் என அறிவித்தார்கள்.

### XVI. கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகம், அரியலூர் மாவட்டம்

### XVII. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகம் மேம்படுத்துதல்

### XVIII. அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல்

1. **பூண்டி அகழ்வைப்பகம்**

2. குற்றாலம் அகழ்வைப்பகம்
3. தருமபுரி அகழ்வைப்பகம்

| வ.எண் | இடம் | மாவட்டம் | அகழாய்வு நடந்த ஆண்டு | தளத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 1 | கொற்கை | தூத்துக்குடி | 1968-1969<br>2020-2021 | தொடங்க வரலாற்றுக் காலம் |
| 2 | பாஞ்சாலங்குறிச்சி | தூத்துக்குடி | 1968-1969 | நவீனக் காலம் |
| 3 | வசவசமுத்திரம் | செங்கல்பட்டு | 1969-1970 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 4 | ஆனைமலை | கோயம்புத்தூர் | 1969-1970 | பெருங்கற்காலம் |
| 5 | பல்லவமேடு | காஞ்சிபுரம் | 1970-1971 | இடைக்காலம் |
| 6 | கரூர் | கரூர் | 1973-1974<br>1994-1995 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 7 | பனைக்குளம் | தருமபுரி | 1979-1980 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 8 | போளுவாம்பட்டி | கோயம்புத்தூர் | 1979-1980<br>1980-1981 | இடைக்காலம் |
| 9 | கோவலன் பொட்டல் | மதுரை | 1980-1981 | பெருங் கற்காலம் |
| 10 | தொண்டி | இராமநாதரபும் | 1980-1981 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 11 | கங்கைகொண்ட சோழபுரம் | அரியலூர் | 1980-1981<br>1986-1987<br>2008-2009<br>2020-2021<br>2021-2022<br>2022-2023 | இடைக்காலம் |
| 12 | கண்ணனூர் | திருச்சிராப்பள்ளி | 1982-1983 | இடைக்காலம் |
| 13 | குரும்பன்மேடு | தஞ்சாவூர் | 1984-1985 | இடைக்காலம் |
| 14 | பழையாறை | தஞ்சாவூர் | 1984-1985 | இடைக்காலம் |
| 15 | அழகன் குளம் | இராமநாதபும் | 1986-1987<br>1990-1991<br>1992-1993<br>1994-1995<br>1996-1997<br>2014-2015<br>2016-2017 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 16 | திருக்கோவிலூர் | கள்ளக்குறிச்சி | 1992-1993 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 17 | கொடுமணல் | ஈரோடு | 1992-1993<br>1996-1997<br>2019-2020<br>2020-2021 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 18 | சேந்தமங்கலம் | விழுப்புரம் | 1992-1993<br>1994-1995 | இடைக்காலம் |
| 19 | படைவீடு | திருவண்ணாமலை | 1992-1993 | இடைக்காலம் |
| 20 | திருத்தங்கல் | விருதுநகர் | 1994-1995 | நுண்கற்காலம் |
| 21 | பூம்புகார் | மயிலாடுதுறை | 1994-1995<br>1997-1998 | தொடக்க வரலாற்றுக் காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | மாளிகைமேடு | கடலூர் | 1999-2000 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 23 | தேரிருவேலி | இராமநாதபுரம் | 1999-2000 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 24 | மாங்குடி | திருநெல்வேலி | 2001-2002 | நுண்கற்காலம் |
| 25 | பேரூர் | கோயம்புத்தூர் | 2001-2002 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 26 | ஆண்டிப்பட்டி | திருவண்ணாமலை | 2004-2005 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 27 | மோதூர் | தருமபுரி | 2004-2005 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 28 | மரக்காணம் | விழுப்புரம் | 2005-2006 | இடைக்காலம் |
| 29 | பரிக்குளம் | திருவள்ளூர் | 2005-2007 | பழங் கற்காலம் |
| 30 | நெடுங்கூர் | கரூர் | 2006-2007 | பெருங்கற்காலம் |
| 31 | மாங்குளம் | மதுரை | 2006-2007 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 32 | செம்பியன்கண்டியூர் | நாகப்பட்டினம் | 2007-2008 | பெருங்கற்காலம் |
| 33 | தரங்கம்பாடி | மயிலாடுதுறை | 2008-2009 | நவீன காலம் |
| 34 | ராஜாக்கள் மங்கலம் | திருநெல்வேலி | 2009-2010 | இடைக்காலம் |
| 35 | தலைச்சங்காடு | நாகப்பட்டினம் | 2010-2011 | இடைக்காலம் |
| 36 | ஆலம்பரை | செங்கல்பட்டு | 2011-2012 | நவீனக்காலம் |
| 37 | ஸ்ரீரங்கம் | திருச்சிராப்பள்ளி | 2013-2014<br>2014-2015 | இடைக்காலம் |
| 38 | உக்கிரன் கோட்டை | திருநெல்வேலி | 2014-2015 | இடைக்காலம் |
| 39 | பட்டறைப் பெரும்புதூர் | திருவள்ளூர் | 2015-2016<br>2017-2018<br>2022-2023 | பிந்தைய பழைய கற்காலம் |
| 40 | கீழடி | சிவகங்கை | 2017-2018<br>2018-2019<br>2019-2020<br>2020-2021<br>2021-2022<br>2022-2023<br>**2024** | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 41 | ஆதிச்சநல்லூர் | தூத்துக்குடி | 2019-2020<br>2020-2021 | இரும்புக்காலம் |
| 42 | சிவகளை | தூத்துக்குடி | 2019-2020<br>2020-2021<br>2021-2022 | இரும்புக் காலம் |
| 43 | மயிலாடும்பாறை | கிருஷ்ணகிரி | 2020-2021<br>2021-2022 | புதியகற்காலம் |
| 44 | வெம்பக்கோட்டை | விருதுநகர் | 2021-2022<br>2022-2023<br>**2024** | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 45 | துலுக்கர்பட்டி | திருநெல்வேலி | 2021-2022<br>2022-2023 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 46 | பெரும்பாலை | தருமபுரி | 2021-2022 | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 47 | கீழ்நமண்டி | திருமண்ணாமலை | 2022-2023<br>**2024** | இரும்புக்காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 48 | பொற்பனைக் கோட்டை | புதுக்கோட்டை | 2022-2023 **2024** | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 49 | பூதிநத்தம் | தருமபுரி | 2022-2023 | புதிய கற்காலம் |
| 50 | திருமலாபுரம் | தென்காசி | **2024** | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 51 | சென்னானூர் | கிருஷ்ணகிரி | **2024** | புதிய கற்காலம் |
| 52 | கொங்கல்நகரம் | திருப்பூர் | **2024** | தொடக்க வரலாற்றுக் காலம் |
| 53 | மருங்கூர் | கடலூர் | **2024** | தொடக்க வரலாற்றுக் காலம் |

APPOLO STUDY CENTRE ★ 25 Years of EXCELLENCE IN COACHING ★